| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2010 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | ராஜீ | நாள் | 04.10.2021 |
| தகப்பனார் பெயர் | பழனியப்ப கவுண்டர் | | |

2, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. சின்னமேட்டுரில் குடியிருப்பதாக கூறுவதற்கு கதவு எண் குறிப்பிடவில்லை என்றால் வீட்டு வேலை நடைபெற்று வருகிறது. ஆகவே கதவு எண் இல்லை. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். யார் யாருக்கு எதிராக எதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மணி, அவருடைய மனைவி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செங்கோட கவுண்டருக்கு எவ்வளவு ஏக்கர் இருந்தது என்றால் 19 ஏக்கர் இருந்தது. 9 ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த 9 ஏக்கரும் எவ்வளவு சொத்துக்களாக போடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 9 ஏக்கரும் செங்கோடகவுண்டருக்கு எந்த வகையில் பாத்தியம் என்பதும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த வருடத்தில் மயானத்திற்காக பாதை எடுக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. எவ்வளவு சென்ட் எடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. யாரிடமிருந்து எடுத்தார்கள் என்றால் ராமசாமி கவுண்டரிடமிருந்து எடுத்தார்கள். கே.ஆர்.மணியின் சித்தப்பாவிடமிருந்து விலைக்கு வாங்கிய 2 ஏக்கர் 20 சென்டிற்கான பத்திரத்தை பார்த்துள்ளேன். அதில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. சாட்சியம் அளிப்பதற்கு முன்பு பார்த்தேனா என்றால் இல்லை. அதற்கு முன்பே பார்த்துவிட்டேன். கே.ஆர்.மணியின் சித்தப்பா பெயர் இளையப்பகவுண்டர். இளையப்பனிடம் எப்போது கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. எவ்வளவு வாங்கினார் என்றால் இளையப்பனிடம் 2 ஏக்கர் 30 சென்ட் இருக்கும். அந்த 2 ஏக்கர் 30 சென்ட்டிற்கு நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு சொத்திலிருந்து 2 ஏக்கர் 30 சென்ட் வாங்கியதாக தெரியுமா என்றால் தெரியாது. மணி குடும்பம் சொத்தை அபகரிக்க முயல்வது நேரடியாக தெரியும் என எவ்வாறு கூறுகிறேன் என்றால் எங்களுடைய தகப்பனார் பெயர் ராமசாமி எனக்கூறி பத்திரம் எழுதிகொண்டார்கள். அதனால் அவ்வாறு கூறுகிறேன். மணிக்கு

ராமசாமி எழுதிகொடுத்த பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அதுகுறித்த தகவலாவது தெரியுமா என்றால் தெரியாது. மணியின் தகப்பனார் பெயர் ராமசாமி என்றால் ஆமாம். மற்றொரு ராமசாமி இருந்தார். அவர் இறந்துவிட்டார். மணியின் தகப்பனார் எழுதிவைத்த ஆவணம் குறித்து வாதி வகையறாக்கள் வழக்கு தாக்கல் செய்து அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும், மாது வாத்தியார் பணம் கொடுத்ததன் அடிப்படையில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சின்ன மேட்டுரில் இல்லை எனவும், அவர் கையூட்டு கொடுத்ததன் பேரில் சின்ன மேட்டுரில் உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

5 மற்றும் 11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நாச்சியப்பகவுண்டர் மகன் சின்னப்பகவுண்டர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவரின் சட்டப்படியான வாரிசு புண்ணியமூர்த்தி என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்மீதும் வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புண்ணியமூர்த்தி, வீரம்மாள், ரதி, தனம் ஆகியோர் மீது பரிகாரம் கோரப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அருகில் உள்ளார்கள். இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது எனவும், வழக்கு தரப்பினர்கள் குறித்து தெரியாது எனவும், பரிகாரங்கள் குறித்தும் தெரியாது எனவும், வாதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.